## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| H.M.O.P. No. 128/2018 | Date :29.06.2022 | PW1 |
|---|---|---|
| Name: சசிகலா | W/o. பாரதி | |
| Evidence Recorded Time: 04.21 P.M. to 04.35 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது எனது அம்மாவின் வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எதிர்மனுதாரர் அத்தை மகன், நான் அவருக்கு தாய்மாமன் மகள் ஆவேன். எங்களுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டுதான் நடைபெற்றது என்றால் சரிதான். 05.09.1997-ம் தேதியில் எங்களது திருமணம் நடைபெற்றது. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் எதிர்மனுதாரர் வீட்டில்தான் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு ஆர்.சி செட்டிபட்டியில்தான் எதிர்மனுதாரர் குடும்பத்தினருடன் கூட்டுக்குடும்பமாகத்தான் வாழ்ந்தோம். 8 வருடங்களாக கூட்டுக்குடும்பமாக இருந்தோம். திருமணத்தின் பயனாக எனக்கும் எதிர்மனுதாரருக்கும் குழந்தைகள் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் திருமணம் முடிந்த ஒரு வருடம் மகிழ்ச்சியாக இருந்தோம் என்றும் அதன் பிறகு சந்தோசமாக இல்லை என்று மனு செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தனக்குள் சாமி இருப்பதாகவும் திடீரென்று கத்துவதும், கதவை பூட்டிவிட்டு சாவியை எடுத்துக்கொள்வதும் என கொடுமைப்படுத்தினார். அவ்வாறு எதிர்மனுதாரர் கொடுமைப்படுத்தியும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்றால் உறவு முறையை அனுசரித்து வாழ்ந்து வந்தேன். மேலும் எதிர்மனுதாரர் அம்மாவான என அத்தையும் ஆறுதல் கூறியதால் எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ்ந்து வந்தேன். நான்தான் எதிர்மனுதாரர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை வைத்து வழக்கு நடத்துகிறேன் என்றாலும் நான் சொல்வது போல எதிர்மனுதாரர் அவ்வாறு எந்தவித செயலும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் என் அத்தை அப்போது ஆறுதலாக இருந்ததால் புகார் கொடுக்கவில்லை. உண்மையில் எதிர்மனுதாரர் என்னை கொடுமை படுத்தியிருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எந்த கொடுமையும் செய்யாத காரணத்தினால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவருக்கு உள்ள பிரச்சனைகளுக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் சிகிச்சைக்கு உடன்படாததால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை.

நான் சொல்வது தவறு என்றாலும் எனது கருப்பை சிகிச்சைக்காகத்தான் எதிர்மனுதாரர் என்னை அழைத்து சென்றார் என்றாலும் அவருடைய மனநிலை சிகிச்சைக்காக அழைத்து செல்லவில்லை என்று சொன்னால் இரண்டிற்கும்தான் சிகிச்சை எடுக்க சென்றோம். 2010–ம் ஆண்டு பவானி சங்கமேஸ்வரர் கோவிலுக்கு சென்றோம். அப்போது எதிர்மனுதாரர் என்னை ஆற்றில் மூழ்கடித்து தாலியை கையோடு கழற்றி ஆற்றில் வீசி எறிந்துவிட்டார் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட பிரச்சனை சம்மந்தமாக பெரியவர்களிடம் தெரிவிக்கவில்லை என்றால் அவர்களுக்கு தெரிந்துதான் அழைத்து சென்றார். நான் சொல்வது போல எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிர்மனுதாரர் மீது உள்ள வெறுப்பினால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 04.12.2012–ம் தேதியில் என் அப்பா இறந்துவிட்டார். என்னுடைய அப்பா கால்நடை மருத்துவராக இருந்தார். என் அப்பா கடைசியாக அய்யம்புதுாரில் இருக்கும் போது இறந்தார். என் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாத போது எதிர்மனுதாரர் என் அப்பாவை பார்க்க அனுமதிக்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என் அப்பா இறந்தபோதும், அவரது ஈமக்கிரியைக்கும் எதிர்மனுதாரர் அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் வரையில் நான் எதிர்மனுதாரரோடு வாழ்ந்துவந்தேன் என்றாலும் என் அப்பா இறப்பிற்கு பிறகுதான் நான் அவர் மீது குற்றச்சாட்டுக்களை சொல்லிவந்தேன் என்றால் என் அப்பா இறந்தபிறகு அதிகபட்சமாக துன்புறுத்த ஆரம்பித்தால் அவரை விட்டு பிரிய நேர்ந்தது. என் அப்பா இறந்த பிறகு எதிர்மனுதாரரை நான்தான் பல வகையிலும் துன்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.